பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 தை 08 வியாழக்கிழமை (21-01-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 55

# தீருவில் சனசமுத்திரத்தின் மத்தியில் வேங்கைகளுக்கு தலைவர் அஞ்சலி

## உறவினர்களுக்கு நேரில் ஆறுதல் கூறித் தேற்றினார்

திருவில், ஜனவரி 21

இந்தியாவின் சதிநாச வேலையால் வீரச்சாவடைந்த விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல் கிட்டு மற்றும் ஒன்பது போராளிகளினதும் நினைவு நடுகல் நடும் வைபவம் நேற்று வல்வை திருவில் சதுக்கத்தில் இடம்பெற்ற போது லட்சக்கணக்கான மக்கள் மத்தியில் தலைவர் வே. பிரபாகரன் நேரில் சமுகம் தந்து, பத்து வேங்கைகளுக்கும் அஞ்சலி செலுத்தினார்.

*அங்கு சமுகமளித்திருந்த—பத்து வேங்கைகளினதும் உறவினர்களுக்கு — தலைவர் ஆறுதல் கூறி அவர்களைத் தேற்றினார்.*

*நெல்லியடிச் சந்தியிலிருந்து புறப்பட்ட பேரணி மாலை 5 மணிக்கு திருவிலை அடைந்தது. மாலை 5. 35 மணிக்கு விசேட வாகனம் ஒன்றில் திருவில் சதுக்கத்துக்குத்*

[4 ஆம் பக்கம் பார்க்க]

## கிட்டுவின் தாயார் நினைவு நடுகல் திரைநீக்கம்

யாழ்ப்பாணம், ஜன 21

தளபதி கேணல் கிட்டு மற்றும் ஒன்பது போராளிகளின் நினைவாக அமைக்கப்பட்ட நடுகல்லை கிட்டுவின் தாயார் திருமதி சிதாலட்சுமி சதாசிவம் திரை நீக்கம் செய்து வைத்தார்.

வீரச்சாவடைந்த 9 போராளிகள் குடும்பத்தவர்கள் அங்கு சுகைச் சுடர் ஏற்றினர்.

கிட்டுவின் துணைவியார் திருமதி சிந்தியா கிட்டுவின் சகோதரர்கள் ஆகியோரும் இந்நிகழ்வில் பங்குபற்றினர்.

பெரும் எண்ணிக்கையான மக்கள் நடுகல்லுக்கு மலர் தூவி அஞ்சலி செய்தனர்.

(உ-5)

# லட்சக்கணக்கில் மக்கள் பேரணியில் திரண்டனர்

திருவில், ஜன, 21

தளபதி கேணல் கிட்டு மற்றும் ஒன்பது போராளிகளுக்கு அஞ்சலி தெரிவித்தும், இந்திய அரசின் துரோகத்தனத்தைக் கண்டித்தும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கண்டனப் பேரணி நேற்றுப் பிற்பகல் 2-30 மணியளவில் நெல்லியடி புளியடிச் சந்தியில் — மில்லர் மத்திய மகா வித்தியாலயத்துக்குச் சமீபமாக — இருந்து ஆரம்பமானது.

கண்டனப் பேரணியில் கலந்து கொள்வதற்காக குடாநாட்டின் பல பகுதிகளிலும் இருந்து அலை அலையாக வந்து திரண்ட மக்களால் நெல்லியடி பிரதேசம் சன சமுத்திரமாகக் காணப்பட்டது.

வடமராட்சிக் கோட்டத்தில் இருந்து திரண்டு வந்த மக்கள் நெல்லியடி பருத்தித்துறை வீதியிலும் —

தென்மராட்சிக் கோட்டத்தில் இருந்து வந்த மக்கள் நெல்லியடி — கொடிகாமம் வீதியிலும் —

வலிகாமம் கோட்டப் பிரதேசத்தில் இருந்து வந்தவர்கள் யாழ் நெல்லியடி வீதி

(3 ஆம் பக்கம் பார்க்க)

# தளபதி கிட்டு தன்னுடன் எடுத்து வந்த யோசனை

## கலாநிதி பாலசிங்கம் வெளிப்படுத்தினார்

யாழ்ப்பாணம், ஜன. 21

மூத்த தளபதி கேணல் கிட்டு தம்முடன் எடுத்து வந்த திர்வுத் திட்டம், யோசனை என்ன?

இது பற்றிய விவரத்தை விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் நேற்று திருவில் நடைபெற்ற கூட்டத்தில் பகிரங்கப்படுத்தினார்.

கேணல் கிட்டு கொண்டு வந்த தீர்வுத் திட்டம் உருவான விதம், அதன் பின்னணி ஆகியவற்றை கலாநிதி பாலசிங்கம் அங்கு விளக்கினார். அவர் கூறியதாவது:-

ஐரோப்பாவில் தளபதி கிட்டு மற்றும் திலகர் ஆகியோருடன் பேச்சு நடத்திய மேற்குலக சமாதான அமைப்பான குவாக்கர்ஸ் குழுவின் பிரதிநிதிகள், பின்னர் ஸ்ரீலங்கா அரசின் உயர்மட்ட அமைச்சர்களுடனும் பேசிவிட்டு இங்கு வந்தனர்.

சமாதானம் ஏற்பட—பேச்சு நடத்த—மேற்கொள்ளப்பட வேண்டிய ஆரம்ப நடவடிக்கைகள் பற்றி அவர்கள் எங்களுடன் பேசினார்கள்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான பேச்சுக்களை எங்கே நடத்துவது? யாருடன் நடத்துவது? என்ன அடிப்

(3 ஆம்பக்கம் பார்க்க)

# தமிழீழம் எங்கும் நேற்று முழு அளவில் ஹர்த்தால்

யாழ்ப்பாணம், ஜன. 21

தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல் கிட்டு மற்றும் ஒன்பது போராளிகளுக்கு அஞ்சலி செலுத்தி துக்கம் அனுஷ்டிக்கு முகமாக தமிழீழம் எங்கும் நேற்றுப் பூரண ஹர்த்தால் இடம்பெற்றது.

கடந்த மூன்று நாட்களாக துக்கதினம் அனுஷ்டித்து தமது அன்றாட அலுவல்களை ஓரளவு செய்து வந்த மக்கள் நேற்று முற்று முழுதாக ஒய்ந்தனர். இந்திய நாசச் சதியில் வங்கக் கடலில் தம்மை அழித்துக் கொண்ட வீர வேங்கைகளின் திருவுருவப் படங்களை வீடுகளின் முன்னால் வைத்துத் தீபம் ஏற்றியும், மலர் தூவியும் அஞ்சலி செய்தனர்.

வீதிகளில் வாழை தோரணங்களுடன் கறுப்பு [illegible] களும் பறக்கவிட்டுத் துக்கம் அனுஷ்டித்தனர்.

நேற்று கடைகள் எதுவும் திறக்கப்படவில்லை. சந்தைகள் கூடவில்லை. பாடசாலைகள் நடக்கவில்லை. அரச திணைக்களங்கள், தனியார் நிறுவனங்கள் இயங்கவில்லை. வீதிகளில் மக்கள் நடமாட்டமிருக்கவில்லை. திருவில் நோக்கிச் சென்ற வாகனங்கள் [illegible]

# தலைவரைக் கண்டதும் மக்கள் ஆர்ப்பரிப்பு

திருவில் சதுக்கத்தில் நேற்று நடைபெற்ற பத்து வேங்கைகளின் நினைவாக நடுகல் நடும் வைபவத்துக்கு தலைவர் பிரபாகரன் வருகை தந்த சமயம், கூடியிருந்த பல்லாயிரக் கணக்கான மக்கள் சோக உணர்வு மாறி தங்களை மறந்த நிலையில் ஆரவாரம் செய்தனர்.

தலைவர் மைதானத்துக்கு அழைத்து வரப்பட்ட சமயம், கைதட்டியும், பலவாறு கோசங்களை எழுப்பியும் மக்கள் ஆர்ப்பரித்தனர்.

மக்கள் சமுத்திரம் ஆரவாரம் செய்த சமயம் அவர்களைக் கட்டுப்படுத்த காவல் துறையினரும், போராளிகளும், தொண்டர்களும் பெரும் சிரமப்பட வேண்டியிருந்தது.

தலைவரைப் பார்த்து விடுவதற்காக மக்கள் முண்டியடித்த வேளை, திருவில் மைதானத்தில் பெரும் சன நெரிசல் ஏற்பட்டது பலர் மயங்கி விழுந்தனர்; நெரிசலில் அகப்பட்ட சிலர் காயமடைந்தனர்.

மூர்ச்சையுற்று விழுந்தவர்களும், காயமடைந்தவர்களும் பெரும் சிரமத்தின் மத்தியில் —அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டனர்.

(உ-5)

## மக்கள் மனதை நெகிழ வைத்த காட்சி

திருவில், ஜன. 21

மாதிரி வடிவமைக்கப்பட்ட 'எம். வி. அஹாத்' கப்பலைத் தாங்கிய ஊர்தியில் எடுத்து வரப்பட்ட கேணல் கிட்டுவின் முழு உயர உருவப்படத்தை— கிட்டுவின் தாயார் கதறி அழுது கட்டி அணைத்த காட்சி அங்கு திரண்டிருந்த மக்களின் நெஞ்சை நெகிழ வைத்தது.

பேரணியில் எடுத்துவரப்பட்ட கப்பலின் மாதிரி வடிவத்தைத் தாங்கிய ஊர்தி நேற்று மாலை திருவில் சதுக்கத்தை வந்தடைந்ததும் அதில் வைக்கப்பட்டிருந்த கேணல் கிட்டுவின் உருவப் படத்துக்கு அவரது மனைவி கதறி அழுதவாறு மலர் தூவி அஞ்சலி செய்தார்.

அவரைத் தொடர்ந்து கிட்டுவின் அன்னை கப்பலில் ஏறி உருவப்படத்தைக் கட்டித் தழுவி கதறி அழுத காட்சி நெஞ்சை உருக்குவதாக இருந்தது.

தளபதி கிட்டுவுடன் வீரச்சாவடைந்த ஏனைய 9 போராளிகளினதும் பெற்றோர் மற்றும் உறவினர்களும் நடுகல் நடும் வைபவம் நடைபெறும் இடத்துக்கு அழைத்து வரப்பட்டனர். அவர்களும் கண் கலங்கி அழுத நிலையில் காணப்பட்டனர்.

[அ-5-3-109-118-155]

கடற்பரப்பில்

## இந்திய ஆதிக்கத்தை கடற்புலிகள் தகர்ப்பர்

### தளபதி சூசை உறுதி

யாழ்ப்பாணம், ஜன 21

கடற்பரப்பில் இந்திய ஆதிக்கத்தை எமது கடற்புலிகள் விரைவில் — நிச்சயம் — தகர்த்தெறிவார்கள். அதுவே நாம் தளபதி கிட்டுவுக்கு அளிக்கும் கௌரவமாக இருக்கும்.

— இப்படிக் கூறினார் கடற்புலிகளின் விசேட தளபதி திரு. சூசை.

தீருவிலில் நேற்று மாலை நடந்த கண்டனக் கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

வெளிநாட்டில் — எமது அமைப்பின் செயற்பாட்டுக்கு பொறுப்பாகச் செயற்பட்ட தளபதி கிட்டு, எமது கடற்புலிகள் பிரிவை விஸ்தரிக்கத் தேவையான உதவிகளை வழங்கிக் கொண்டிருந்தார். அங்கிருந்து ஒருவரை இங்கு அனுப்பி, கடற்புலிகள் அமைப்பு தீவிரமாக — நவீனமயமாக — உதவினார்.

— இவ்வாறு திரு. சூசை மேலும் குறிப்பிட்டார்.

## போரை விரைவில் முடிக்க நாம் ஒன்று திரள்வோம்!

### தளபதி கருணா அழைப்பு

திருவில், ஜன. 21

போரை மிக விரைவில் முடிவுக்குக் கொண்டு வருவதற்காக நாம் அனைவரும் ஒன்று திரண்டு போராட முன்வர வேண்டும்.

—இவ்வாறு தெரிவித்தார் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட விசேட தளபதி திரு. கருணா.

இந்தியாவின் சதிக்குப் பலியான தளபதி கேணல் கிட்டு மற்றும் ஒன்பது போராளிகளின் நினைவாக தீருவில் நடுகல் நடும் வைபவத்தில் கலந்து கொள்வதற்காக தென் தமிழீழத்தில் இருந்து இங்கு வந்துள்ள அவர் திருவிலில் நேற்று மாலை நடந்த கண்டனக் கூட்டத்தில் உரையாற்றினார்.

எமது போராட்டத்தை ஒரு நீண்டகாலத் திட்டத்தில் நடத்த முடியாது. அதை தொழிலாக ஏற்றும் செய்ய முடியாது. போரை மிக விரைவில் முடிவுக்குக் கொண்டு வர வேண்டிய ஓர் கட்டாய சூழ்நிலை இன்று இருக்கின்

[3 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

இரும்பு ராக்கியும் (6 அடிx 5½ அடி), Ronson பெண்கள் மிதிவண்டியும் விற்பனைக்கு உண்டு. சந்திப்பு காலையில் 9 மணிவரை, நண்பகல் 1—3 மணிவரை 'வரோதயன்', திருவீதி, உரும்பராய் வடக்கு. (24131)

### தேவை

நல்ல நிலையிலுள்ள Guitar விலைக்கு உடன் தேவை. இல. 482, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (24149)

### இலவச திருமண சேவை

46 வயது, சதயம், தனியார் துறையில் லிகிதர் வேலை புரிபவருக்கு ஏற்ற மணப் பெண் தேவை சீதனம் பேசித் தீர்க்கலாம். மணமக்கள் தேர்வுக்கு ஞாயிறு காலையில். து விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி. (2411○)

## ஐ. நாவில் 180 நாடுகள்

லண்டன், ஜன. 21

செக்கோஸ்லாவாக்கியா இரண்டாகப் பிரிந்த பின் உருவாக்கப்பட்ட செக், ஸ்லோவாக் குடியரசுகள் இரண்டும் ஐக்கிய நாடுகள் சபையில் அங்கத்துவம் பெற்றுள்ளன.

இதன் காரணமாக ஐ. நா. சபையில் மொத்தம் 180 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. (க)

## அபிராமிபட்டர் விழா

நெல்லியடி, ஜன. 21

பருத்தித்துறை - கோட்டுவாசல் அருள்மிகு ஸ்ரீ சண்டிகா பரமேஸ்வரி கோவில் அபிராமிப்பட்டர் விழா நாளை வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு நடைபெறும் (க-109)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜன. 21

கச்சேரி - நல்லூர் வீதியிலுள்ள பாணன்குளம் நாச்சி அம்பாள் ஆலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை அபிராமிப் பட்டர் விழா நடைபெறவுள்ளது. மாலை 3 மணிக்கு அபிஷேகம், பூசை, அந்தாதி ஓதல் ஆகியன நடைபெறும். (க)

## மன்னாருக்கு 5 கோடி ரூபா ஒதுக்கீடு

கொழும்பு, ஜன. 21

மன்னார் மாவட்ட அபிவிருத்திக்காக 5 கோடி ரூபாவை அகதிகளுக்கான ஐ. நா தூதரகம் ஒதுக்கியுளளது

மன்னார் மாவட்டத்தில் உள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலமாக இந்த அபிவிருத்தி திட்டங்கள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது [ஓ-3]

## பிரேமாவின் அடுத்த திட்டம்

கொழும்பு ஜன. 21

"நாடெங்கும் 300 ஆஸ்பத்திரிகள் நிறுவுவதே எனதுடுத்த திட்டமாகும்"

இப்படிக் கூறினார் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸ.

பெலியத்தையில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அமைக்கப்பட இருக்கும் முன்னூறு ஆஸ்பத்திரிகளும் சகல வசதிகளையும் கொண்டதாக இருக்கும என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

நாடெங்கும் 200 ஆடை தயாரிக்கும் தொழிற்சாலைகளை அமைக்கும் ஒரு திட்டத்தை ஜனாதிபதி பிரேமதாஸ தற்சமயம் நடைமுறைப்படுத்த முயற்சி செய்து வருவது தெரிந்ததே [ஓ-3]

## கிளின்டன் பதவியேற்பு

அமெரிக்காவின் 42 ஆவது ஜனாதிபதியாக ஜனநாயகக் கட்சியைச்சேர்ந்த திரு பில் கிளின்டன்

இலங்கை- நேரப்படி இன்று அதிகாலை ஒரு மணியளவில் பதவியேற்றார். (உ-எ)

## மருதங்குளம் தாக்குதல்; படையினருக்கு அதிர்ச்சி

கடந்த வியாழக்கிழமை இரவு வவுனியா எல்லைப்புற மருதங்குளம் அகதி முகாமில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த ஆறு பொலீசாரும் ஓர் உதவியாளருமாக ஏழு பேர் புலிகளின் தாக்குதலில் உயிரிழந்திருப்பது பாதுகாப்பு வட்டாரங்களில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருப்பதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

வவுனியா நகரில் இருந்து ஐந்து மைல் தூரத்தில் இந்த முகாம் அமைந்திருக்கிறது.

இப்பகுதி தமது பூரண கட்டுப்பாட்டில் உள்ளது என இராணுவம் கருதியிருக்க, அப்பகுதிக்குள் புலிகள் எப்படி வந்தார்கள், எப்படித் தாக்கிவிட்டு மறைந்தார்கள் என்று தெரியாமல் பாதுகாப்பு வட்டாரங்கள் முழிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தாக்குதல் சம்பவம் எப்படி இடம்பெற்றது என்பது மர்மமாக இருப்பதாகவும்—

இராணுவ உயர்மட்ட விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ)


யா/மகாஜனக் கல்லூரி,
தெல்லிப்பழை.

**G. C. E. (A/L) 1995 வகுப்புக்கள்**

G. C. E. (A/L) 1995 சகல வகுப்புக்களும் 25-01-1993 திங்கட்கிழமை ஆரம்பமாக இருக்கின்றன.

மேற்படி வகுப்புக்களுக்கு விண்ணப்பித்து அனுமதி பெறவிருக்கும் மாணவர்களை 23 - 01 - 1993 சனிக்கிழமை காலை 9-00மணிக்கு யா / இணுவில் மத்திய கல்லூரியில் சமுகமளித்து, சகல கட்டணங்களையும் செலுத்தி, தங்களது அனுமதிகளை உறுதிசெய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

அதிபர்,
யா/மகாஜனக் கல்லூரி.
தெல்லிப்பழை.

(சி-2538)



**31ஆம் நாள் நினைவஞ்சலி**

தோற்றம்: 10 — 08 — 1941



மறைவு: 22 — 12 — 1992

**அமரர் மகேசு செல்வரத்தினம்**

யாழ்ப்பாணம் அரியாலையூரைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், மட்டுவில் வடக்கில் திருமணம் புரிந்து மக்கட் செல்வத்துடன் வாழ்ந்து மறைந்த செல்வரத்தினம் அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

என்றன் இனிய துணைவரே! எம்மைக் கலங்க விட்டு எங்கே சென்றீரோ!

அனுதினமும் எம்மை ஆதரித்துக் காப்பாற்றி வளர்த்த ஐயாவே! தங்களைப் பிரிந்து நாங்கள் சஞ்சலம் அடைகின்றோம்.

அன்பு மனைவி, மக்கள்,
தந்தை, தாய், சகோதரர்கள்.

மட்டுவில் வடக்கு,
மட்டுவில்.

(24134)



சாந்தி பெறுக! சாந்தி தருக!!

**அமரர் வல்லிபுரம் விசுவலிங்கம்**

(இளைப்பாறிய ஆசிரியர்,
வயாவிளான் வேலுப்பிள்ளை வித்தியாலயம்)

**31ஆம் நாள் ஆத்மசாந்தி பிரார்த்தனை**



எங்கள் குடும்ப விளக்கே!
மங்காத பேரொளியில்
சங்கமமாயினையா......

இன்று வியாழன் பகல் 11 மணியளவில், எமது கோண்டாவில் இல்லத்தில் நிகழும் சடங்குகளில் கலந்திட, உறவுகளை, சுற்றத்தை அன்புடன் அழைக்கும்:

திருமதி
இராசலட்சுமி விசுவலிங்கம்
"விசுவலட்சுமி வாசா",
மயிலிட்டி தெற்கு,
தெல்லிப்பளை.

மலர்வு: 25 — 10 — 1920

மறைவு: 22 — 12 — 1992

(24133)


## போரில் உயிரிழந்த, ஊனமுற்ற படையினருக்கு வீடு கட்ட பிரேமா ரூ.5 கோடி நிதியுதவி

கொழும்பு, ஜன. 21

வடக்கு - கிழக்கு யுத்தத்தில் உயிரிழந்த ஸ்ரீலங்காப் படையினரின் குடும்பங்களுக்கும் ஊனமுற்ற படையினருக்கும் தேசிய மட்டத்தில் வீடுகளை அமைத்துக் கொடுக்கும் திட்டம் ஒன்றுக்கு ஜனாதிபதி ஆர். பிரேமதாஸ 5 கோடி ரூபாவை வழங்கியுள்ளார்.

இந்தத் திட்டத்தின் முதற் கட்டமாக 500 வீடுகள் விரைவில் கட்டப்படும் என்றும்—

தொடர்ந்து வருடாந்தம் 500 வீடுகள் வீதம் நிர்மாணிக்கப்படும் என்றும் ஸ்ரீலங்கா இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்னா தெரிவித்தார். (ஓ-3)

## உயர் வகுப்புக்கு மாணவர் பாடசாலைகளில் அனுமதி

யாழ்ப்பாணம், ஜன. 21

யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் ஆண்டு 12 வகுப்புக்கு மாணவர்களை அனுமதிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

கடந்த நவம்பரில் நடைபெற்ற ஜி சீ. ஈ. (சாதாரண) தர முன்னோடிப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில், உயர் வகுப்புக்கு மாணவர்கள் அனுமதிக்கப்படுவர் என பிரபல பாடசாலைகளின் அதிபர்கள் தெரிவித்தனர்

கடந்த டிசம்பரில் பரீட்சைத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட ஜி. சீ. ஈ (சாதாரண) தரப் பரீட்சையின் பெறுபேறுகள் வெளியாக காலதாமதமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இப்பரீட்சைக்கு யாழ் மாவட்டத்தில் இருந்து தோற்றிய பரீட்சார்த்திகளின் விடைத்தாள்கள் நீண்ட கால தாமதத்தின் பின் சில தினங்களுக்கு முன்னரே கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டன என்பது தெரிந்ததே.

விடைத்தாள்கள் திருத்தப்பட்டு, பெறுபேறுகள் ஒழுங்குபடுத்தப்பட்டு வெளியிடப்பட குறைந்தது இரண்டு முதல் மூன்று மாதங்கள் செல்லும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே தமிழீழப் பகுதியில் கடந்த நவம்பரில் நடத்தப்பட்ட முன்னோடிப் பரீட்சையின் முடிவுகளின் அடிப்படையில் மாணவர்களை உயர் வகுப்புக்கு அனுமதித்து, அந்த வகுப்புகளை உடன் ஆரம்பிக்க முடிவு செய்யப்பட்டதாக பிரபல கல்லூரி ஒன்றின் அதிபர் ஒருவர் தெரிவித்தார். (உ)


**NEW SCIENCE HALL**
Kannathidy, Jaffna.

**SPECIAL ENGLISH COURSES**

க. பொ. த (சாதாரணம்) 1993 / 1994
க. பொ. த. (உயர்தரம்) 1993 / 1994
வகுப்புகளுக்குரிய

★ ENGLISH LITERATURE

துரித, விரிவான, தரமான போதனை

ஆசிரியர்: K. சோமசுந்தரம்

(பல வருட அனுபவம் ஆற்றல் மிக்க ஆசிரிய கலாசாலை விரிவுரையாளரும், ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளரும்)

ஆரம்பம்: 24 - 01 - 1993
பிற்பகல் 3-00 மணி

(சி-4185)



அகில இலங்கை விஸ்வகர்மகுல சங்கம்
யாழ்ப்பாணம்.

**தை அமாவாசைத் திருவிழா**

மேற்படி சங்க ஆதரவில் வருடா வருடம் திருக்கேதீஸ்வரத்தில் நடைபெற்றுவரும் குறிப்பிட்ட திருவிழா இவ்வருடம் அங்கு நடத்த முடியாத கால சூழ்நிலை காரணமாக

யாழ். வண்ணை ஸ்ரீ காமாட்சியம்பாள்
(நாச்சிமார்) கோவிலில்

22-01-93 வெள்ளிக்கிழமை பகல் 11 மணியளவில்

விசேட அபிஷேக ஆராதனைகளுடன் நடைபெற உள்ளது.

அத்தருணம் சகல உறுப்பினர்களையும் தவறாது பங்குபற்றிச் சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

- நிர்வாக சபையினர்.

(24133)



**SPECIAL ENGLISH COURSE**

★ பாடசாலை விலகிய, G. C. E. வரை ஆங்கிலம் படித்த உயர் கல்வி கற்கும் பல்கலைக்கழக, தொழில் நுட்ப மாணவர், அரச / தனியார்துறை ஊழியர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்குப் பொருத்தமானது.

★ ஒருங்கிணைந்த மொழித் திறனுடன் கூடியது.

ஆசிரியர்: த, ந பஞ்சாட்சரம்

ஆரம்பம்: 23 — 01 — 1993
பிற்பகல் 2மணி

தொடர்பு கொள்க:
**SCIENCE ACADEMY**
JAFFNA.

(சி-4183)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

# வேற்றுமையில் ஒற்றுமையா?

சிங்களவர்களின் முட்டாள் தனத்தினால் இன்னும் [ஏழு வருடங்களுக்குள் — அநேகமாக இரண்டாயிரம் ஆண்டளவில் — சட்டப்படியான தமிழீழம் உருவாகலாம். இவ்வாறு ஜனாதிபதியின் அரசியல் ஆலோசகரும், அரசியல் விமர்சகருமான அனுருத்த திலகசிறி அரச ஆதரவுப் பத்திரிகையான "ஒப்சேவரில்" எழுதியுள்ளார்.

இவர் இதனை எழுதுவதற்கு முன்னர், அமெரிக்க நிறுவனம் ஒன்று இரண்டாயிரம் ஆண்டளவில் தமிழீழம் மலர்ந்து விடும் என்று தனது அரசியல் ஆய்வறிக்கையில் தெரிவித்திருந்தது.

ஆனால் சிங்கள மக்களுக்கும், பௌத்த சிங்களப் பேரினவாதிகளுக்கும் இந்த உண்மை புரியவில்லை. சிங்கள அரசியல் தலைவர்களோ, கண்ணை மூடிக்கொள்ளும் பூனை, உலகமே இருண்டு விட்டதாக நினைப்பதுபோல எல்லாம் தமது கையில் தான் தங்கியுள்ளது, தாம் எண்ணுவதைச் செய்யலாம் என்று கற்பனை உலகில் சஞ்சரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழர்கள் ஒரு தனித்துவம் மிக்கத் தேசிய இனத்தினர். அவர்கள் இந்த நாட்டில் பல நூற்றாண்டுகளாக வாழ்ந்து வருகிறார்கள். அவர்களின் தாயகமாக இப்போதைய வடக்கு- கிழக்கு மாகாணம் விளங்கியது. இப்போதும் விளங்குகிறது. அவர்கள் பூரண இறைமையும் சுதந்திரமும் உள்ள மக்களாகத் தமக்கென அரசுகளைக் கொண்டிருந்தார்கள். தம்மைத் தாமே ஆண்டார்கள். ஐரோப்பியர்கள் இந்த நாட்டில் காலடி வைப்பதற்கு முன்னர் தமிழர்கள் எவருக்கும் அடிமைகளாக வாழ்ந்ததில்லை.

தமிழர்களுக்கென வளமும் சிறப்பும் கொண்ட தொன்மை மிக்க மொழி உண்டு. பெருமை மிகு கலாசாரமும், வரலாறும், மதமும் அவர்கள் வசம் உள்ளன. அவர்கள் வீரத்தில் எந்த இனத்தவருக்கும் சளைத்தவரல்லர். தமிழர்கள் ஒரு காலத்தில் உலகின் முன்னிலையில் நின்றவர்கள்.

மகாவம்சத்தின்படி பார்த்தாலும், இலங்கையின் சரித்திரம் 2,000 ஆண்டுகளுடையது. இக்காலத்தில் என்றாவது தமிழர்களும் சிங்களவர்களும் முழுச் சம்மதத்துடன் ஒன்றித்து வாழ்ந்ததில்லை. ஒரு சில காலங்களில் சிங்களவர்கள், தமிழர்கள் படைபலத்தால் முழு இலங்கையும் சேர்த்தது உண்டு ஆனால் பின்னர் பிரிந்தே வாழ்ந்துள்ளனர்.

ஆகையால் சிங்களவர்கள் நினைப்பது போல, தமிழர்கள் அடிமைகளாகவோ அற்ப சலுகைகளுடனோ வாழப் போவதில்லை. தமிழர்கள் பொருளாதார நலனுக்காகவோ அன்றி வர்க்க நன்மைக்காகவோ போராடவில்லை. தமது இனத்தின் தன்மானத்திற்கும் சுதந்திரத்திற்குமாகவே போராடுகிறார்கள்.

இதனை உணராத சிங்களவர்களும், சிங்களத் தலைவர்களும் தாமாக உருவாக்கிய ஒரு கற்பனை உலகில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அதனால் தான் ஒற்றையாட்சியைக் கட்டிப்பிடித்துக் கொண்டிருக்கும் மடமைத்தனப் போக்குள்ளவர்களாக இருக்கிறார்கள். வேற்றுமையில் ஒற்றுமை காண்போம் என்கிறார்கள். ஒற்றுமைக்காக வேற்றுமையை அழிப்பது என்பது இங்கே பொருந்தாது.

இந்தப் பின்னணியை, நிலைமையை உணராது சிங்களத் தலைவர்கள் அதிகாரப்பரவலுக்கு அப்பால் ஒரு சென்றிமீற்றரும் அசையாமல் இனப் பிரச்சினையைத் தீர்ப்பது என்பது எவ்வாறு சாத்தியம்? அவர்கள் முட்டாள்தனமாக நடக்கிறார்களோ, தமிழர்களை ஏமாற்றக்கூடிய விவேகத்துடன் நடக்கிறார்களோ, என்றோ ஒரு நாள் — விரைவில் தமிழர்களுக்கெனத் தனிநாடு ஒன்று உருவாகியே ஆகும்.

## பாட நூல்கள்

கிளிநொச்சிப் பாடசாலைகளுக்கான இவ்வாண்டிற்குரிய இலவசப் பாட நூல்கள் கடந்த 4 ஆம் திகதி கொழும்பிலிருந்து எடுத்து வரப்பட்டன. (க-97)

## போரை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

றது.

எமது தளபதிகள் இழப்பைக் கண்டு நாம் சோர்ந்து போகக் கூடாது அவர்களின் வழி நடத்தலில் நின்று போரை முடிவுக்குக் கொண்டு வர நாம் அனைவரும் தீவிரமாகப் போராட வேண்டும். — இவ்வாறு அவர் அங்கு மேலும் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி தலைமையில் கண்டனக் கூட்டம் நடைபெற்றது.

கவிஞர் வாஞ்சிநாதன், மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு பொன்.தியாகம், யாழ். மாவட்ட விசேட தளபதி திரு தமிழ்ச்செல்வன், கடற்புலிகள் விசேட தளபதி திரு. சூசை, திரு. வே. பாலகுமாரன், மகளிர் முன்னணி துணைப் பொறுப்பாளர் செல்வி ரதி, விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் திரு. தேவர், திரு. யோகரத்தினம் யோகி, தமிழீழ நீதித்துறைப் பொறுப்பாளர் திரு. பரா, விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் ஆகியோரும் உரையாற்றினர்.

நேற்று மாலை 6-15 மணியளவில் ஆரம்பமான திருவில் கண்டனக் கூட்டம் இரவு 8-15 மணியளவில் முடிவடைந்தது.

## லட்சக்கணக்கில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

யிலும் — அணிஅணியாகத் திரண்டனர்.

### நாலாபுறமிருந்தும் மக்கள் கூட்டம்

நேற்றுக் காலை முதல் நாலாபுறங்களிலும் இருந்து வாகனங்களிலும், சைக்கிள்களிலும், கால்நடையாகவும் மக்கள் சாரி சாரியாக வடமராட்சியை நோக்கிப் படை எடுத்தனர்.

பேரணி ஆரம்பமான போது விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட தாக்குதல் பிரிவினர் முன்னால் அணிவகுத்துச் சென்றனர். அதன் பின்னால் கடற்புலிகளின் ஆண், பெண் போராளிகள் அணிவகுத்து வந்தனர்.

### ஆசாத்தின் மாதிரி வடிவம்

தளபதி கேணல் கிட்டு பயணம் செய்த 'எம். பி. ஆசாத்' கப்பலின் மாதிரிவடிவம் பிரமாண்டமான முறையில் அமைக்கப்பட்டு ஊர்தியாக எடுத்துச் செல்லப்பட்டது.

தளபதி கேணல் கிட்டுவின் முழு உருவப்படம் கப்பலின் முன்னால் அமைக்கப்பட்டிருந்தது. அவருடன் வீரச்சாவடைந்த மற்ற ஒன்பது போராளிகளினதும் திருவுருவப் படங்கள் கப்பலில் வைக்கப்பட்டிருந்தன. கப்பலின் இருமருங்கிலும் விடுதலைப் புலிகள் அணிவகுத்தனர் விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினரின் 'பாண்ட்' வாத்தியக் கோஷ்டியினரும் அதன் பின் அணி வகுத்துச் சென்றனர்.

### இரண்டே கால் மணி நேரம்

இவர்களின் பின்னால் மக்கள் திரண்டு சென்றனர். பிற்பகல் 2. 45 மணியளவில் நெல்லியடிச் சந்தியிலிருந்து ஆரம்பித்த பேரணியின் முதற்பகுதி மாலை 5 மணியளவில் திருவில் சதுக்கத்தைச் சென்றடைந்தது.

பேரணியாகச் சென்ற மக்கள் தளபதி கேணல் கிட்டுவின் உருவப்படங்களை தாங்கிச் சென்றனர். உணர்ச்சி வசப்பட்ட நிலையில் இந்திய அரசிற்கும், தமிழ்நாடு மாநில அரசுக்கும் எதிரான கோஷங்களை மக்கள் பேரணியில் ஒலித்னர்.

இந்திய அரசின் நாசச் செயலைக் கண்டிக்கும் பதாகைகளும் பெரும் எண்ணிக்கையில் பேரணியில் எடுத்துச் செல்லப்பட்டன.

பிற்பகல் 2.45 மணியளவில் நெல்லியடிச் சந்திக்குச் சமீபமாக இருந்து ஆரம்பித்த பேரணி நெல்லியடி - வதிரி வீதி ஊடாகச் சென்று அங்கிருந்து அல்வாய் பருத்தித்துறை வீதி வழியாக உடுப்பிட்டிச் சந்தியை அடைந்து அங்கிருந்து திருவில் நோக்கிச் சென்றது.

பேரணியின் முதற் பகுதி மாலை 5 மணியளவில் திருவில் சதுக்கத்தைச் சென்றடைந்தது. "ஜெயலலிதா ஒழிக!", "நரசிம்மராவ் ஒழிக" என்ற கோஷங்கள் அப்போதுவானை பிளந்தன.

(அ.5-3-109-113-115)

# அ. தி. மு. க. - காங்கிரஸ் மீண்டும் கருத்து மோதல்

சென்னை, ஜன. 21

தமிழகத்தில் அ. தி. மு. க தலைமைக்கும் இந்திரா காங்கிரஸ் தலைமைக்கும் இடையே மீண்டும் கருத்து மோதல் ஏற்பட்டிருப்பதாக தெரிய வருகிறது.

வாழப்பாடி இராமமூர்த்தியை தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் பதவியில் இருந்து நீக்கினால்தான் அ. தி. மு. க. — காங்கிரஸ் கூட்டணி தொடரும் என்று அ. தி. மு. கவின் அமைப்புச் செயலாளரும் அமைச்சருமான திரு. எம். கண்ணப்பன் தெரிவித்திருக்கிறார்.

சென்னையில் அண்மையில் ராஜீவ்காந்தி சிலை திறப்பு விழாவுக்கு வந்த காங்கிரஸ்காரர்கள் அதில் கலந்துகொள்ளாமல் பலவந்தமாகத் தடுக்கப்பட்டார்கள் என்று வாழப்பாடி இராமமூர்த்தி தெரிவித்த கூற்றைக் கண்டித்து திரு. கண்ணப்பன் இந்தக் கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

கண்ணப்பனின் குற்றச்சாட்டுக்குப் பதிலளித்து தமிழ்நாடு காங்கிரஸ் நிர்வாகக்குழு வெளியிட்ட அறிக்கையில் —

ராஜீவ்காந்தி சிலை திறப்பு விழாவில் லட்சக்கணக்கான காங்கிரஸ் தொண்டர்கள் கலந்துகொண்டது, அ தி.மு. கவினருக்கு அச்சத்தை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அ. தி. மு. க. — காங்கிரஸ் கூட்டணி தொடரும் என்று பிரதமர் ராவ் கூறிய பின்னரும் கண்ணப்பன் கண்டன அறிக்கை வெளியிட்டிருப்பது, அ. தி. மு. க. இனிமேல் பாரதீய ஜனதாக் கட்சியையே ஆதரிக்க தீர்மானித்து இருப்பதைக் காட்டுகிறது என்றும் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(உ-எ)

## கருத்தரங்கு

சவால்களை எதிர் கொள்வதற்கும் பயிற்சிக்குமான பொது நிலையினர் மையம் நடத்தும் "அவர்களும் ஒன்றாயிருக்கும்படி" எனும் தலைப்பிலான கருத்தரங்கு 23 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 - 30 மணி முதல் நண்பகல் 12-30 மணிவரை சுண்டிக்குளி பரியோவான் தேவாலய மண்டபத்தில் அருட் கலாநிதி ஹென்றி விக்டர் தலைமையில் நடைபெறும்.

## தபால் பெட்டிகளின் அவல நிலை!

மானிப்பாய் பகுதியிலுள்ள தபாற் பெட்டிகள் உடைந்தும், பழுதடைந்தும் மோசமான நிலையில் காட்சியளிக்கின்றன.

சில தபால் பெட்டிகள் சிறு கற்களும், கண்ணாடித் துண்டுகளும் போடப்பட்டு நிரப்பப்பட்டுள்ளன.

விஷமிகள் சிலரின் இந்தச் செய்கைகளினால் மக்களே பாதிப்படைந்துள்ளனர்.

(ஒ-90)

# தளபதி கிட்டு தன்னுடன் ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

படையில் பேசுவது? என்பன போன்ற விடயங்கள் அப்போது ஆராயப்பட்டன.

கொழும்புக்குச் சென்று பேச முடியாது என நாம் கூறினோம்; சிங்கள இராணுவத்தை நம்ப முடியாது என்றோம்.

அதனையடுத்து வெளிநாடு ஒன்றின் தலைநகரில் பேசுவதற்குத் திட்டமிடப்பட்டது

புலிகள் தரப்பில் தளபதி கிட்டு, திலகர் ஆகியோருடன் தலைவர் பிரபாகரனால் நியமிக்கப்படும் பிரதிநிதிகளும் பங்கு பற்றலாம் எனமுடிவானது.

எதைபற்றிப் பேசுவது என்பது குறித்து பிரச்சினை எழுந்தது. வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இணைந்த தமிழர் தாயகத்தை ஏற்பதற்கு மறுக்கும் சிங்கள அரசுடன் பேசுவதா? சமஷ்டி முறை பற்றிப் பேசுவதா? அப்படியாயின் எத்தகைய சமஷ்டி முறை பற்றிப் பேசுவது?— போன்ற பிரச்சினைகள் எழுந்தன.

### எமது யோசனை

சிங்கள அரசு உருப்படியான யோசனை எதனையும் தரவில்லை. இந்நிலையில் நாம் எமது தரப்பில் யோசனை ஒன்றை வெளியிட்டோம்.

இடைக்காலத் தீர்வாக யுத்த நிறுத்தம் ஒன்றை இரு தரப்பும் செய்வோம் என நாம் கூறினோம். மக்கள் கஷ்டங்கள் நீங்கி, நிம்மதியாக வாழ முதலில் வழி செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டோம்.

அரசு சமாதான சூழ்நிலையை ஏற்படுத்தி மக்களின் நல்லெண்ணத்தைப் பெறுவது அவசியம் என்பதைச் சுட்டிக் காட்டினோம்

சில இடங்களில் படைகளை ஸ்ரீலங்கா அரசு வாபஸ்பெற வேண்டும்; குடியேற்றப் பிரதேசங்களில் — போக்குவரத்துக்குத் தடையாக உள்ள பகுதிகளில் — குடாநாட்டை முற்றுகையிட்டுள்ள பகுதிகளில் — இருந்து படைகள் வாபஸ் பெறப்படவேண்டும் என்று குறிப்பிட்டோம்.

அதன் பின்னர் விடுதலைப் புலிகளின் கீழ் ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகளுக்கு இடைக்கால நிர்வாக ஒழுங்கை ஏற்படுத்தவேண்டும் என்றும்—

அந்தக் காலப்பகுதியில் தமிழீழ மக்களுக்குரிய நிவாரணம், அவர்களின் புனர்வாழ்வு உட்பட சகல வசதிகளையும் செய்து கொடுத்து அவர்களின் துன்பத்தைப் போக்கி அவர்களின் நல்லெண்ணத்தை — நம்பிக்கையை — அரசு பெற வேண்டும் என்றும்—

அதற்கு முன்னர் ஒரு தீர்வுத் திட்டத்தைப் பற்றி நாம் பேசமுடியாது என்பதை வலியுறுத்தினோம்.

ஆகவே நாம் குறிப்பிடுவது போல சமாதான ஒழுங்கு ஒன்றைக் கொண்டு வாருங்கள்; நாங்கள் ஒத்துழைக்கிறோம்; போர் நிறுத்தத்துக்கு நாங்கள் தயார் என்று குறிப்பிட்டோம்.

இது பற்றி ஐரோப்பிய நாடு ஒன்றின் தலைநகரில் பேசுவோம் என குவேக்கர்ஸ் குழுவிடம் தெரிவித்தோம்.

அவர்கள் இது பற்றி கொழும்பில் [illegible] அரசு-

னும் சில ஐரோப்பிய நாடுகளுடனும் பேசினர்.

### புலிகளின் நிலைப்பாடு சரியானதே

இனப்பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வுகாண முடியாது என்றும்—

முன்பு இந்திய — இலங்கை உடன்பாடு ஏற்பட்டதை அடுத்து சிபாரிசு செய்யப்பட்டது போன்ற வடிவத்தில் இடைக்கால நிர்வாக ஒழுங்கு அவசியம் என்றும் விடுதலைப் புலிகள் கூறுவது சரியானதே என்று அந்நாடுகள் ஒப்புக்கொண்டன.

இதன் பின்னர் குவேக்கர்ஸ் குழு கிட்டு திலகருடன் தொடர்புகொண்டது.

புலிகளின் யோசனையை ஐரோப்பிய நாடுகள் ஓரளவுக்கு நல்ல யோசனையாகக் கருதின.

ஆகவே இது பற்றிப் பேச வேண்டும் எப்படிப் பேசுவது, எங்கே பேசுவது என்ற பிரச்சினை எழுந்தது.

இங்கிருந்து நாம் யாராவது இங்கிலாந்துக்கு கப்பலில் போவதானால் காலதாமதமாகும். விமானம் மூலம் போவதானால் நாம் கொழும்பு செல்ல வேண்டும். அது சாத்தியமல்ல: அதனால் எமது பிரதிநிதிகளை இந்தியாவுக்கு வருமாறும் அங்கிருந்து லண்டனுக்குச் செல்லலாம் என்றும் குவாக்கர்ஸ் குழு எமக்கு அறிவித்தது.

நாம் இங்கிருந்து புறப்படுவதற்கு முன்னர்—

இந்த சமாதானத் திட்டத்தின் விவரங்கள், அதுபற்றி ஸ்ரீலங்கா அரசின் நிலைப்பாடு மேற்கத்திய ஐரோப்பிய நாடுகள் என்ன கருதுகின்றன, இங்கிலாந்தில் இது பற்றிப் பேசுவதற்கான சூழ்நிலை எப்படி இருக்கிறது என்பது பற்றி அங்கிருந்து சில விவரங்கள் எங்களுக்குத் தேவைப்பட்டன.

தலைவர் பிரபாகரனுக்கு குறியீட்டு வார்த்தைகள் மூலம் (Code Word) அங்கிருந்து இது பற்றி அறிவிக்க முடியாது.

இதனால் தான் இந்த முழு விவரங்களையும் தம்முடன் கொண்டு கிட்டு இங்கு புறப்பட்டார்.

### இந்தியாவுக்கு முழுதும் தெரியும்

இது பற்றிய முழு விவரமும இந்தியாவுக்குத் தெரியும். குவாக்கர்ஸ் சமாதானக் குழு ஒரு வார காலம் புதுடில்லியில் தங்கி நின்று வெளிவிவகார மற்றும் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளைக் கண்டு பேசி விளக்கமளித்தது.

அப்போது புலிகளின் போக்குவரத்துக்கு உத்தரவாதமளிப்பதாக இந்தியா குவாக்கர்ஸ் குழுவிடம் வாக்குறுதி அளித்தது.

இந்தியாவின் உதவியுடன் நாங்கள் வெளிநாடு சென்று வரவும், எங்களின் போக்குவரத்துக்கு உதவி செய்யவும் இந்தியா இணங்கியதாக குவாக்கர்ஸ் குழு எங்களிடம் கூறியது. எங்களிடம் அதற்கான ஆவணச் சான்றுகள் இருக்கின்றன

ஆனால் இந்தியா கொடுத்த வாக்குறுதியை மீறி கிட்டு வந்த கப்பலை மறித்தது.

கிட்டு ஏன் வருகிறார், என்ன திட்டம் கொண்டு வருகிறார் என்பது எல்லாம் தெரிந்திருந்தும் இந்தியா ஏன் இப்படி நடந்தது?

உண்மையில் ஐரோப்பிய தலையீட்டை இந்தியா விரும்பவில்லை.

அதனால் தான் இந்தியா இந்த விடயம் மிக இரகசியமாக இருக்க வேண்டும் என அப்போது கூறியது இந்தப் பேச்சுக்கள், இங்கிருந்து நடைபெறும் போக்குவரத்து அனைத்தும் இரகசியமாக இருக்க வேண்டு என்றது.

ஆனால் நாங்கள் அதை விரும்பவில்லை இந்தியாவை நம்பி, இரகசியப் பேச்சு என்று சொல்லி நாம்டில்லிக்கு எப்படி போவது? அவர்கள் எங்களைக் கைது செய்யவும் கூடும் கொலையும் செய்யலாம்

ஆகவே தான் எந்தப் பேச்சும் பகிரங்கமாக இருக்க வேண்டும்; உத்தியோக பூர்வமாக இருக்க வேண்டும், வெளிநாட்டுத் தலைநகர் ஒன்றில் அந்த நாட்டின் மத்தியஸ்தத்துடன் நடக்க வேண்டும் எனத் தலைவர் பிரபாகரன் கோரிக்கை விடுத்தார்.

இராணுவத்தைச் சமாளிப்பதற்காக ஸ்ரீலங்காவும் இப்பேச்சை இரகசியமாக வைத்திருக்க விரும்பியது.

பிரிட்டனும் இரகசியத்தையே விரும்பியது

எல்லோரும் இரகசியம் என்று குறிப்பிட்டது எங்களுக்குச் சந்தேகத்தைக் கொடுத்தது. ஆகவே கிட்டு இங்கு வந்து எங்களுக்கு முழு விவரத்தையும் தந்தால் நாம் இது பற்றி ஆழமாகச் சிந்தித்து முடிவு செய்யலாம் எனக் கருதினோம்.

எனவே இப்படியான சில தகவல்களுடன் தான் கிட்டு புறப்பட்டார்.

அவர் எங்கு வந்து, தென்னாசியா நாட்டின் எந்தத் தலைநகரத்தில் இறங்கினார்? எங்கு படகு ஏறினார்? எப்படிப் பயணம் செய்தார் என்பது எல்லாம் இந்தியப் புலனாய்வுத்துறைக்கு நன்கு தெரியும்.

இருந்தும் இந்த சமாதான முயற்சியை — ஐரோப்பிய சமாதான முயற்சியை — குழப்ப வேண்டும் என்பதற்காக கிட்டுவை இந்தியா தடுத்து நிறுத்தியது.

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தை தனது ஐக்கியத்துக்கும் ஒருமைப்பாட்டுக்கும் பெரும் அச்சுறுத்தலாக இந்தியா பார்க்கிறது. பாகிஸ்தானின் அணுகுண்டை விட தலைவர் பிரபாகரனின் உறுதிக்கு இந்தியா பயப்படுகிறது.

இங்கு ஓர் ஆயுதப் போராட்டம் — புரட்சி — வெடித்து தமிழீழம் உருவாகினால் அதன் எதிர் விளைவாக இந்திய சாம்ராஜ்ஜியம் சரிந்து விழுமோ என்றும் —

தமிழீழத்தைப் பின்பற்றி இந்தியாவில் உள்ள தேசிய இனங்கள் சுதந்திரப் போராட்டத்தைத் தீவிரப்படுத்தினால் நாடு உடையுமோ என்றும் இந்திய அஞ்சுகிறது

இதனால்தான் இந்தியா எமது விடுதலைப் போராட்ட விடயத்தில் மோசமாக — வெறி கொண்டு— நடக்கிறது. — என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி வினாசித்தம்பி செல்லம்மா

காரைநகர் சிவன் கோவில் வீதியைச் சேர்ந்த திருமதி வினாசித்தம்பி செல்லம்மா 19 - 1 - 93 இல் கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற பொன்னையா வினாசித்தம்பியின் அன்பு மனைவியும், நாகேந்திரன் (லண்டன்), நாகரெத்தினம் (107, புதுச்செட்டித்தெரு, கொழும்பு), திலகவதி (கொழும்பு), அருளாம்பிகை (லண்டன்), சௌந்தலாம்பிகை (லண்டன்), சரஸ்வதி (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும் —

பாலசுப்பிரமணியம் (லண்டன்), லோகேஸ்வரன் (லண்டன்), இராசமலர் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் —

காலஞ்சென்ற வெற்றிவேலு - கந்தையா, திருமதி கந்தையா சிவகாமன் ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சிவபாக்கியம், தியாகராசா (காரைநகர் இ. போ. ச. டிப்போ, முன்னாள் அதிகாரி), பரம்சோதி (அவுஸ்திரேலியா), இந்திராதேவி (கொழும்பு), யவனாம்பிகை (யாழ்ப்பாணம்), ஆகியோரின் அன்புச் சகோதரியும் —

காலஞ்சென்ற பொன்னையா நாச்சன் அவர்களின் அன்பு மருமகளும், தியாகராஜா, கனகம்மா, காலஞ்சென்ற இராசசேகரம் (ஆயுர்வேத வைத்தியர்), இந்திராணி, இராசையா (கொழும்பு), வரதராசா (நகை வாணிபம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (20-1-93) புதன் கிழமை கொழும்பில் நடைபெற்றதென அறியத்தருகிறோம்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளும்படி வேண்டிக் கொள்கிறோம்.

தகவல்:
திருமதி கந்தையா சிவகாமன், (தாயார்)
திரு, திருமதி வரதராசா: (சகோதரி, மைத்துனர்)

159, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். (2414)

## கந்தையா பரமநாதர்

காரைநகர் கருங்காலியைச் சேர்ந்த கந்தையா பரமநாதர் (முன்னை நாள் கிராம சபை உறுப்பினர்) காலமானார்.

அன்னார் தங்கம்மாவின் அன்புக் கணவரும், சோதிநாதன், லோகநாதன், கதிர்காமநாதன், திருஞானசம்பந்தன் (ஆசிரியர், யாழ். மத்திய கல்லூரி), சத்தியாதேவி, ரதிமலர் ஆகியோரின் அன்புத் தந்தையும், மகேஸ்வரியம்மா (ஆசிரியர், யோகபுரம் மகா வித்தியாலயம்), புஷ்பராணி, புஷ்பராணி (ஆசிரியர், யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி), தயாபரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், நாகேஸ்வரி, தாமரைச்செல்வி ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற சிதம்பரம், காலஞ்சென்ற பரிமளம், காலஞ்சென்ற இராமலிங்கர், வள்ளியம்மை, நல்லம்மா, பொன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (21-1-93) வியாழன் காலை 10 மணிக்கு சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு சமீபமாக உள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருஞானசம்பந்தன் (ஆசிரியர், யாழ். மத்திய கல்லூரி)

சிரணிச் சந்தி,
சண்டிலிப்பாய். (24149)

## இளையதம்பி மாரிமுத்து

நவக்கிரி புத்தூரை பிறப்பிடமாகவும் குரும்பசிட்டியை வசிப்பிடமாகவும், தற்போது லிங்கபவனம், கொக்கன் வளவு, இணுவில் கிழக்கு என்ற விலாசத்தில் வசித்தவருமான இளையதம்பி மாரிமுத்து 20-01-93 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற பார்வதியின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற பொன்னம்பலம் (பொலிஸ்பென்சனியர்) முத்துக்குமாரு (பிரான்ஸ்) [முன்னாள் C. W. E களஞ்சிய முகாமையாளர், யாழ்ப்பாணம்.] ஆகியோரின் தகப்பனாரும், காலஞ்சென்ற செல்வராணி, செல்லம்மா, ஆகியோரின் மாமனாரும், ஜெயசிறி (லண்டன்), பிரான்சில் வசிக்கும் ஜெயச்சந்திரன, ஜெயநிதி, கருணாகரன், ஜெயகுமார், ஜெயகலா ஆகியோரின் பேரனும், திலக்சனின் பூட்டனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இணுவில் கிழக்கில் இன்று வியாழக்கிழமை (21-01-1993) காலை 10 மணிக்குநடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்:
மு. கனகரத்தினம் (அங்கிள்)

லிங்க பவனம்
கொக்கன் வளவு,
இணுவில். (24146)

## வீரகத்தி கந்தையா

செட்டியகுறிச்சி, பண்டத்தரிப்பைச் சேர்ந்த ஓய்வு பெற்ற ஆசிரியர் வீரகத்தி கந்தையா 19-01-93 செவ்வாய் இறைபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பார்வதியின் அன்புக் கணவரும், ராஜேந்திரன் (பகுப்பாளர், சவூதி அரேபியா), தவமணிதேவி, ஜெயரஞ்சிதம் (பிரான்ஸ்), வசந்தகுமாரி ஆகியோரின் அன்புத்தந்தையும், ராஜராஜேஸ்வரி, சந்திரசேகரம், சபாநாதன், யோகீஸ்வரன் ஆகியோரின் மாமனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 19 01-93 செவ்வாய்க்கிழமை செட்டியார் மடத்தில் நடைபெற்றது.

தகவல்:
த. சந்திரசேகரம்

செட்டியார்மடம்,
வட்டுக்கோட்டை. (14142)

## கொடும்பாவி எரிப்பு

தளபதி கேணல் கிட்டு மற்றும் ஒன்பது போராளிகளின் சாவுக்குக் காரணமாக இருந்த இந்திய அரசைக் கண்டிக்கும் விதத்தில் நேற்றும் பல இடங்களில் இந்தியப் பிரதமர் நரசிம்மராவினதும், தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவினதும் கொடும்பாவிகள் எரிக்கப்பட்டன.

நகரில், செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அலுவலகத்தின் முன்பாகவும், அகதிகளுக்கான ஐ. நா. தூதரக அலுவலகத்தின் முன்பாகவும் கொடும்பாவிகள் எரிக்கப்பட்டன.

மற்றும் பல இடங்களிலும் இருவரினதும் கொடும்பாவிகள் வீதிகளில் இழுத்துச் செல்லப்பட்டு சந்திகள், சந்தைத் மைதானங்கள், மயானங்களில் எரிக்கப்பட்டன.

(அ-162-17-15-69-111)

## இன்றைய ஆட்டங்கள்

றோட்டறிக் கழக முன்னாள் தலைவர் சத்தியமூர்த்தி ஞாபகார்த்தமாக யாழ். மிட்ரவுண் றோட்டறக்ட் கழகம் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை யாழ். சென்பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்கள் வருமாறு:-

★ 3.00 மணி (கண்காட்சி ஆட்டம்) :- பாடும் மீன் அணி எதிர் சென் நிக்கிலஸ் அணி

★ 4.00 மணி அரையிறுதி ஆட்டம்) :- சென். அன்ரனீஸ் அணி எதிர் சென். றோக்ஸ் அணி. (உ)

★ ★ ★

ஹற்றன் நஷனல் வங்கி யாழ். மாவட்ட அணிகளுக்கிடையில் நடத்தி வரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை 3.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக அணியை எதிர்த்து ஜொனியன் கறுப்பு அணி மோதும். இந்த ஆட்டம் யாழ். பல்கலைக்கழக ஆடுகளத்தில் நடைபெறும். (உ)

## தமிழீழம் எங்கும்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தவிர போக்குவரத்துச் சேவைகள் நடக்கவில்லை. யாழ். ஆஸ்பத்திரி வெளிநோயாளர் பிரிவுக்கு மிகக் குறைந்த நோயாளரே வந்திருந்தனர். யாழ். நகரம் மட்டுமன்றி குடாநாடு முழுவதும் வெறிச் சோடிக் கிடந்தது.

வீதிகளிலும், கேந்திர இடங்களிலும் சோக கீதங்களும், விடுதலைக் கீதங்களும் ஒலி பரப்பப்பட்டன

(அ-162-17-15-111)

## திருவில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் பிரபாகரன் வந்திறங்கினார். அவரின் வருகையை ஒட்டி அங்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன

நினைவு கல் நாட்டப்பட்ட இடத்திலிருந்து சுமார் 300 யார் தூரம் வரை வாகனத்தில் வந்திறங்கிய தலைவர், அங்கிருந்து மலர் வளையத்தைத் தாங்கியவாறு நினைவு நடுகல் வரை நடந்து வந்தார். அந்தப் பெரிய மலர் வளையத்தின் நடுவே கேணல் கிட்டுவினது திருவுருவமும் அதைச் சூழ ஏனைய ஒன்பது போராளிகளினது படங்களும் பொறிக்கப்பட்டிருந்தன. "வீர வணக்கம்" என்ற வாசகத்துடன் அழகுற அமைக்கப்பட்டிருந்த மலர் வளையத்தைத் தமக்கே உரிய கம்பீரத்துடன் தாங்கியவாறு தலைவர் பிரபாகரன் நடந்து சென்று நினைவு நடுகல்லுக்கு அதனை சாத்தி அஞ்சலி செலுத்தினார்.

அதன் பின்னர், அங்கு சமூகம் தந்திருந்த பத்து வேங்கைகளினது உறவினர்களுக்கு தலைவர் நேரில் தனித்தனியே ஆறுதல் கூறி, அவர்களைத் தேற்றினார்.

பின்னர் பத்து வேங்கைகளுக்கும் வீரவணக்கம் செலுத்தி விட்டு, மாலை 6 மணியளவில் திருவில் சதுக்கத்தில் இருந்து வாகனம் ஒன்றில் அவர் புறப்பட்டுச் சென்றார்.

(அ-[illegible])

# மரண அறிவித்தல்கள்

## குமரேசு கணநாதன்

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த குமரேசு கணநாதன் (முன்னாள் களஞ்சியப் பொறுப்பாளர், இலங்கை விமானப்படை, மீன்பிடிக் கூட்டுத்தாபனம்) நேற்று புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமரேசு - சின்னம்மா ஆகியோரின் அன்பு மகனும், சாந்தகுணதேவியின் அருமைக் கணவரும், குமரேஸ்வரநாதன் (பிரான்ஸ்), குகநாதன் (பிரான்ஸ்), சாந்தா பத்மலிங்கம், வீரமரணமடைந்த குணநாதன் (கப்டன் இன்குர்), குமரேஸ்வரன் (நோர்வே), சாரதா, குகதாசன் (சுவிடன்), குணசீலன், கமலதாசன் ஆகியோரின் பாசத் தந்தையும், பத்மலிங்கம் (கணக்காளர், கொழும்பு), குழுநா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும், பத்மராஜ், ஹேபராஜ் ஆகியோரின் ஆசைப் பேரனும், காலஞ்சென்ற பரஞ்சோதியம்மா, சிவபாதசுந்தரம் (கொழும்பு றோயல் கல்லூரி முன்னாள் ஆசிரியர் - கனடா) ஆகியோரின் அருமைச் சகோதரருமாவார்.

இறுதிக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை (21-1-1993) பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வழுக்கையாறு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
மனைவி

"குமரபதி",
சிவன் கோவிலடி,
வட்டுக்கோட்டை. (சி/4270)

## மார்க்கண்டு கனகசிங்கம்

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கிறிண்லேஸ் வங்கியின் இளைப்பாறிய உத்தியோகத்தர் மார்க்கண்டு கனகசிங்கம் 20 - 01 - 93 புதன்கிழமையன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்ற மலாயன் பென்சனர் சின்னத்தம்பி மார்க்கண்டு தம்பதியரின் புதல்வரும், கனகேஸ்வரியின் அருமை கணவரும், மாலினி, ரவீந்திரன் (கனடா), குகேந்திரன் (ஜேர்மனி), சுரேந்திரன் (கனடா), பிரியதர்சினி (கொழும்பு), சுமித்திரன் (சுவிஸ்), றஜினி (கனடா) ஆகியோரின் அருமைத் தந்தையும், ஞானசுந்தரம், திருமதி தவமணி தர்மலிங்கம் ஆகியோரின் அருமைச் சகோதரரும், கமலநாதன் (கனிப்பொருள் மணல் கூட்டுத்தாபனம், புல்மோட்டை), பிறேமநளினி (ஜேர்மனி), பிரகேஸ்வரி (கனடா), தயானந்தன் (கனடா), கிருபராஜா (கனடா) ஆகியோரின் அருமை மாமனாரும், பிருந்தாவன், அபிராமி, சாரங்கன், கார்த்திகா, ஜீத்தா ஆகியோரின் அன்புப் பேரனும், கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த மலாயன் பென்சனியர் காலஞ்சென்ற குட்டித்தம்பி, திருமதி இரத்தினம்மா ஆகியோரின் அருமை மருமகனும் ஆவார்.

அன்னாரது இறுதிச் சடங்குகள் கோண்டாவில் மேற்கு சைவப்பாடசாலை ஒழுங்கையிலுள்ள அவரது இல்லத்தில் இன்று (21 - 01 - 93) வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் கோண்டாவில் காரைக்கால் மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்

தகவல்:
திருமதி மாலினி கமலநாதன் (மகள்)

சைவப் பாடசாலை ஒழுங்கை,
கோண்டாவில். [24148]

## சின்னப்பு தியாகராசா

(Retd. Railway Supt. Colombo - Fort)

கோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் சங்குவேலியை வசிப்பிடமாக கொண்டவருமான சின்னப்பு தியாகராசா காலமாகிவிட்டார். இவர் கோப்பாய் தெற்கைச் சேர்ந்த வைத்திலிங்கம் சின்னப்பு- தெய்வானை ஆகியோரின் அன்பு மகனும், சங்குவேலியைச் சேர்ந்த காலஞ்சென்ற நமசிவாயம் பொன்னையா - செல்லம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், மங்கயர்க்கரசியின் அன்புக் கணவரும், தயாபரனி (யாழ் மருத்துவபீடம் 3 ஆம் வருட மாணவி), தயாளன், தயாளினி (மாணவி, உடுவில் மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், இராசா (ஓய்வுபெற்ற தபால் திணைக்கள உத்தியோகத்தர்), பாலசிங்கம் (கொழும்பு), நாகேஸ்வரி, பரமேஸ்வரி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (21-1-93) வியாழக்கிழமை தகனக்கிரியைகளுக்காக காலை 10 மணியளவில் மானிப்பாய் பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

தகவல்:
தயாளன் (மகன்)

டச்சு றோட்,
சண்டிலிப்பாய். (5738)

## குருசுமுத்து வேதநாயகம்

அச்சுவேலி தென்மூலையைச் சேர்ந்த குருசுமுத்து வேதநாயகம் இறைபதம் அடைந்தார்.

இவர் திருமதி பேனெடெட் அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற ஏப்ரகாம், றோஸ்மேரி, வுலோரா. மேரிஆன், அன்ரனி ஜோசப் (கனடா), இக்னேஷியஸ், லோகநாயகி, கிறிஸ்ரினா, அஞ்சலோ ராஜன் (கனடா) ஆகியோரின் அருமைத் தந்தையாரும், சேவியர் (ஆசிரியர்), நேசராஜா, செல்வராஜா (அச்சுக்கோப்பாளர்), வாயல் (ஆசிரியர்), றெஜிஸ் ராஜ் (கனடா), செலின் (மக்கள் வங்கி, மானிப்பாய்), சாந்தி (கனடா) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று வியாழக்கிழமை (21 - 01 - 93) பிற்பகல் 3-30 மணிக்கு அச்சுநகர் புனித சூசையப்பர் ஆலயத்தில் திருப்பலி பூசை ஒப்புக் கொடுக்கப்பட்ட பின் நல்லடக்கத்திற்காக சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:
இக்னேஷியஸ் (மகன்)

சிற்றுபலபுறம்,
அச்சுவேலி. (24150)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [illegible] யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 21-01-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org